**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 25 ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.68/2025**

CNR No. TNTL06-000678-2025

1) தளவாய்சாமி
2) பாப்பா
3) பேச்சியம்மாள் ... வாதிகள்

–எதிர்–

1) வட்டாட்சியர்,
திருநெல்வேலி தாலுகா.

2) மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம். ... பிரதிவாதிகள்

இந்த வழக்கு 21.02.2025 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.06.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.குலசேகரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.R சங்கர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு உட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, இறந்து போன இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவருக்கு வாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் வாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் எனக் குறிப்பிட்டு 2 ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டுமென

செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>வழக்குரையின் சுருக்கம்:-</u>**

2.1) வாதிகள் சகோதர, சகோதரிகள் என்றும், வாதிகளின் தந்தை இசக்கி என்பவர் கடந்த 07.11.1989 ம் தேதி இறந்து விட்டதாகவும், வாதிகளின் தந்தையாகிய இசக்கி என்பவர் தந்தை ஊமையன் மற்றும் அவரது தாய் சுடலைமாடி ஆகியோர்கள் இறந்து விட்டனர் என்றும், வாதிகளின் தந்தையார் இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்றும், வாதிகளின் தாயார் ஊர்காளி என்பவர் 30.01.2024 ம் தேதி இறந்து விட்டதாகவும், வாதிகளின் தந்தையாருக்கு சில புஞ்சை நிலங்கள் உள்ளது என்றும், வாதிகளின் தகப்பனாருக்கு வாரிசு சான்றிதழ் கோரி திருநெல்வேலி வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்ததில், மேற்படி மனுவானது நிராகரிக்கப்பட்டது என கூறப்பட்டுள்ளது.

2.2) எனவே, வாதிகள் காலம் சென்ற இசக்கி என்பவரின் வாரிசுகள் என விளம்புகை செய்யக் கோரியும், 2 ம் பிரதிவாதி காலம் சென்ற இசக்கி என்பவரின் வாரிசுகள் வாதிகள் எனக் குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டுமென செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>2 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1 ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்:-</u>**

3.1) வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படிக்கும், பொருண்மைபடிக்கும் நிலைக்கக்கூடியதல்ல என்றும், தமிழக அரசின் முதன்மை செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை, வருவாய் நிர்வாக பிரிவு, சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.9633/RA-3(2(/2022-4, நாள்.28.09.2022-ன் படி வாரிசு சான்றிதழ் விண்ணப்ப மனு நிராகரிக்கப்பட்டால் சம்மந்தப்பட்ட கோட்டாட்சி தலைவரிடம் மேல்முறையீடு

தாக்கல் செய்யப்பட வேண்டும். உரிமையியல் நீதிமன்றத்தை நாட இயலாது. எனவே, இவ்வழக்கானது உரிமையியல் நீதிமன்றத்திற்கு உட்பட்டதல்ல என்றும், எனவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

**4) வாதிகளின் வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் இரு தரப்பு ஆவணங்களையும் பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கை தீர்மானிக்க கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:-**

1. Whether this court has got jurisdiction to try this suit?
2. Whether the plaintiff's are the legal heirs of deceased Esakki @ Periya Esakki who died on 07.11.1989?
3. Whether the plaintiff's are entitled to get an relief of declaration as prayed for?
4. Whether the plaintiff's are entitled to get an relief of mandatory injunction against the 2nd defendant as prayed for?
5. To what other reliefs the plaintiffs' are entitled to?

5) வாதிகள் தரப்பில், 3ம் வாதி திருமதி.பேச்சியம்மாள் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. திரு.இசக்கிமுத்து என்பவர் வா.சா.2 ஆகவும், 3ம் நபரான திரு.பாலகிருஷ்ணன் என்பவர் வா.சா.3 ஆகவும், 3ம் தரப்பினரான திரு.செல்லத்துரை என்பவர் வா.சா.4 ஆகவும், திரு.பொன்னுமுத்து (கிராம நிர்வாக அலுவலர், கங்கைகொண்டான் பகுதி -1) என்பவர் வா.சா.5 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வா.சா.5ன் மூலம் சா.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்று ஆவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள்

பரிசீலிக்கப்பட்டது.

7) வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் மூலம் வாதிகள் இறந்து போன இசக்கி என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் என நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும், எனவே, இவ்வழக்கை அனுமதிக்க வேண்டுமென வாதிடப்பட்டது.

7.2) பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிகள் தரப்பில், வாதிகள் இறந்து போன இசக்கி என்பவரின் வாரிசுகள் என்பதை நிரூபிக்கவில்லை என்றும், வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட கோட்டாட்சி தலைவரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**<u>8) எழுவினா 1 க்கான தீர்வு</u>**

வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கை இந்நீதிமன்றம் நடத்துவதற்கு அதிகார வரம்பு உள்ளது என்று வாதிட்டார். பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கை இந்நீதிமன்றம் நடத்துவதற்கு அதிகார வரம்பு இல்லையென வாதிட்டார்.

9) பிரதிவாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டி வாதிடப்பட்ட அரசாணையை பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட அரசாணையில் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் வழங்கினாலோ அல்லது நிராகரித்தாலோ மேல்முறையீடு செய்வதற்கான வழிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் கூட மேற்படி அரசாணையில் இறந்த நபரின்

வாரிசுகள் யார் யார் என விளம்புகை செய்வது தொடர்பான வழக்கை விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை. மேலும் வாதிகள் தங்களுடைய சட்டமுறையான நிலையை விளம்புகை செய்யக்கோரி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் குறித்தவகை நிவாரண சட்டம் பிரிவு 34 ன் படி இந்த வழக்கினை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை உள்ளது. மேலும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 9 ன் அடிப்படையிலும் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையரை உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எழுவினா 1 வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

**<u>எழுவினா 2 மற்றும் 3 க்கான தீர்வு</u>**

10) 3 ம் வாதி/வா.சா.1 தனது சாட்சியத்தில், தனது தந்தை இசக்கி என்பவர் கடந்த 07.11.1989 ம் தேதி இறந்து விட்டார் என்றும், தனது தந்தையின் பெற்றோர்கள் தனது சிறுவயதிலேயே இறந்து விட்டனர் என்றும், தனது தாயார் ஊர்காளி என்பவர் கடந்த 30.01.2024 ம் தேதி இறந்து விட்டார் என்றும், தனது தந்தையின் இறப்பு பதிவு செய்யப்படவில்லை என வழக்குரையில் உள்ள சங்கதிகளை உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்தே வா.சா.2 முதல் வா.சா.4 வரையிலான சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளனர்.

11) வா.சா.5 / கிராம நிர்வாக அலுவலர் தனது சாட்சியத்தில், இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவர் 07.11.1989 ல் இறந்துள்ளார் என்றும், இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவரின் வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பித்த மனு அவருக்கு 2 மனைவிகள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அவரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யாததாலும், அது தொடர்பான மற்ற ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் தான் நிராகரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

11.2) மேற்படி வா.சா.5 யிடம் நீதிமன்ற கேள்வி என கேட்ட போது, அவர் தனது சாட்சியத்தில், "**இசக்கி என்ற பெரிய இசக்கி முதலில் வெள்ளையம்மாள் என்பவரை திருமணம் செய்தார். இசக்கி என்ற பெரிய இசக்கி மற்றும் வெள்ளையம்மாள் ஆகியோர்களுக்கு மகள் இருந்தார் அவர் 8 வயதில் இறந்தார். இசக்கி என்ற பெரிய இசக்கி மற்றும் வெள்ளையம்மாள் ஆகியோர்களின் திருமணம் நிலுவையில் இருந்த போது இரண்டாவதாக ஊர்காளி என்பவரை திருமணம் செய்தார். இசக்கி என்ற பெரிய இசக்கிக்கும், ஊர்காளி என்பவருக்கும் ஒரு மகனும், 2 மகள்களும் உண்டு. வெள்ளையம்மாள் மற்றும் ஊர்காளி இறந்து விட்டார்கள். தற்போது வாதிகள் மட்டுமே காலஞ்சென்ற இசக்கி என்ற பெரிய இசக்கிக்கு வாரிசுகள் ஆவார்கள்** " என சாட்சியம் அளித்துள்ளார்.

12) வா.சா.5 / கிராம நிர்வாக அலுவலர் தாக்கல் செய்த அறிக்கை / சா.சா.ஆ.1 ஐ பரிசீலனை செய்கையில், மேற்படி இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவர் கடந்த 07.11.1989 ம் தேதி இறந்து விட்டார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவர் இறந்து விட்டார் என்பதை சா.சா.ஆ.1 ஆன அறிக்கை மூலம் உறுதியூட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9 ஐ பரிசீலனை செய்கையில், 3 ம் வாதி வாரிசு சான்றிதழ் தரக் கோரி 2 ம் பிரதிவாதியிடம் மனு செய்துள்ளார் என்பதையும், மேற்படி மனுவானது, இறந்து போன நபரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என கள விசாரணையில் தெரிய வந்ததால் வாரிசு சான்றிதழ் வழங்க முடியாது என மேற்படி மனு நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதை வா.சா.ஆ.9 ன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

13) மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில், இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவர் இறந்து விட்டார் என்பதை வா.சா.1 முதல் வா.சா.5 ன் சாட்சியம் மற்றும் சா.சா.ஆ.1 ஆன அறிக்கை மூலம்

நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவர் இறக்கவில்லை என்பதை குறிப்பிட்டு மறுத்து எந்தவிதமான சாட்சியத்தையும் அளிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14) வா.சா.ஆ.1 ஐ பரிசீலனை செய்கையில், அது வாதிகளின் தந்தை பெயரை காட்டும் பட்டா எண்.1938 ஆக தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஐ பரிசீலனை செய்கையில், அது வாதிகளின் தாயாரான இறந்து போன ஊர்காளி என்பவரின் வாக்காளர் அட்டையாக உள்ளது. அதில் அவரது கணவர் பெயராக இசக்கி என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆன இறப்பு சான்றிதழை பரிசீலனை செய்கையில், அது வாதிகளின் தாயாரான ஊர்காளி என்பவர் கடந்த 30.01.2024 ம் தேதி இறந்து விட்டார் என தெரிய வருகிறது.

14.2) வா.சா.ஆ.4 ஆன 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டையை பரிசீலனை செய்கையில், அதில் 1ம் வாதியின் கார்டியன் பெயராக ஊர்காளி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ஐ பரிசீலனை செய்கையில், அது 2ம் வாதியின் ஆதார் அட்டை என தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 ஐ பரிசீலனை செய்கையில், அது 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை என தெரிய வருகிறது. வா.சா.ஆ.7 ஐ பரிசீலனை செய்கையில், அது கொடிவழி ஜாபிதாவாக தெரிய வருகிறது. வா.சா.ஆ.8 ஐ பரிசீலனை செய்கையில், 3ம் வாதி, 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாரிசு சான்று கோரி விண்ணப்பித்ததற்கான ரசீதாக தெரிய வருகிறது.

15) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மேற்படி இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவர் அவரது முதலில் வெள்ளையம்மாள் என்பவரை திருமணம் செய்ததாகவும், அதன் பயனாக ஒரு பெண் குழந்தை பிறந்ததாகவும், மேற்படி பெண் குழந்தை 8வது வயதில் இறந்து விட்டார் என்றும், மேற்படி இசக்கி என்பவரின் முதல் மனைவியான வெள்ளையம்மாள்

உயிருடன் இருந்த போதே இரண்டாவதாக ஊர்காளி என்பவரை திருமணம் செய்து அதன் பயனாக வாதிகள் பிறந்ததை சா.சா.ஆ.1 / கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை மூலம் அறியமுடிகிறது இருந்தபோதிலும் தற்போது மேற்படி இசக்கி என்பவரின் முதல் மனைவி, அவரது குழந்தை, இரண்டாவது மனைவி இறந்துவிட்டார்கள் என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. வா.சா.1 முதல் வா.சா.5 வரையிலான சாட்சியத்தின் மூலம் இசக்கி என்பவர் இறந்துவிட்டார் என்பதை வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

16) இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8ல் உள்ள முதல் வகுப்பு அட்டவணையை பார்வையிடுகையில் வாதிகள் முதல் வகுப்பு வாரிசுகள் என்ற வரையறையில் வருகிறார்கள் என்பதை அறிய முடிகிறது. வாதிகளை தவிர முதல் வகுப்பு வாரிசுகளில் யாரும் தற்போது இல்லை என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

17) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், இந்து வாரிசுரிமைச் சட்டப் பிரிவு 8 ல் உள்ள அட்டவணையில் முதல் வகுப்பு வாரிசுகள் என்ற வரையறையில் வாதிகள் வருவதாலும், வாதிகள் இறந்து போன இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவரின் வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் பெற உரிமையுடையவர்கள் என எழுவினா 2 மற்றும் 3 வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

__எழுவினா 4 க்கான தீர்வு :–__

18) வாதிகள் தங்களது வழக்குரையில் 2ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் வாதிகளுக்கு வழங்க முடியாது என சொன்னதாக கூறியுள்ள சங்கதிகளை உறுதியூட்டும் வகையில் வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.5/ கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அறிக்கை / சா.சா.ஆ.1 மற்றும் 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் வழங்கப்பட்ட வா.சா.ஆ.9 ஐ பரிசீலனை செய்கையில், இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவருக்கு இறப்பு சான்றிதழ் மற்றும் அது தொடர்பான

ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பதால் 3ம் வாதி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி தனது சட்டப்படியான செயலை செய்து முறையாக 3ம் வாதி மனுவை நிராகரித்துள்ளார். எனவே எழுவினா 4 வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா 5 க்கான தீர்வு :–</u>**

19) வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது வாதிகளுக்கு இதர பரிகாரம் வழங்குவதற்கு இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இவ்வழக்கானது கீழ்க்கண்டவாறு பகுதியாக அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(அ) கடந்த 07.11.1989 ம் தேதியில் இறந்து போன இசக்கி என்ற பெரிய இசக்கி என்பவருக்கு வாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(ஆ) வாதிகள் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்து தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(இ) வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையை அவர்வர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். செலவு தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 25 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Judgment Uploaded on 25.06.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.06.25 18:07:33 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

**வாதிகள் தரப்பு சாட்சிகள்** -

வா.சா.1 – திருமதி. பேச்சியம்மாள் (3ம் வாதி)

வா.சா.2 – திரு.இசக்கிமுத்து

வா.சா.3 – திரு.பாலகிருஷ்ணன்

வா.சா.4 – திரு. செல்லத்துரை

வா.சா.5– திரு. பொன்னுமுத்து (கிராம நிர்வாக அலுவலர்)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** -

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 – | பட்டா எண்.1938 (இணையதள நகல்) |
| வா.சா.ஆ.2 – | வாதிகளின் தாயார் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீட்டு சரி பார்க்கப்பட்ட நகல்) |
| வா.சா.ஆ.3 – | வாதிகளின் தாயார் இறப்பு சான்றிதழ் (இணையதள நகல்) |
| வா.சா.ஆ.4 – | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீட்டு சரி பார்க்கப்பட்ட நகல்) |
| வா.சா.ஆ.5– | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீட்டு சரி பார்க்கப்பட்ட நகல்) |
| வா.சா.ஆ.6 – | 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீட்டு சரி பார்க்கப்பட்ட நகல்) |
| வா.சா.ஆ.7 – | கொடி வழி ஜாபிதா |
| வா.சா.ஆ.8 – | 3ம் வாதி திருநெல்வேலி வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரிசு சான்று கோரி விண்ணப்பத்திற்கான ரசீது (இணையதள நகல்) |
| வா.சா.ஆ.9– | 1ம் பிரதிவாதி, வாதி தரப்பில் வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனுவை நிராகரித்ததற்கான மேலெழுத்து (இணையதள பதிவிறக்க நகல்) |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**சாட்சி தரப்பு சான்றாவணங்கள்** -

| | |
|---|---|
| சா.சா.ஆ.1 – | கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை |

MARIMUTHU R MUNIYASAMY Judgment Uploaded on 25.06.2026 Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY Date: 2026.06.25 18:07:18 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

அ.வ.எண்.68/2025

சீரான/ வரைவு தீர்ப்புரை

25.06.2026.